வடமராட்சிப் பகுதியில் வான் - கடல் தாக்குதல்!

பொது
உடனுக்குடன்
16-7-1991
பகுதி

விலை ரூபா 4-50

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆனி 31 இதழ்: 154
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 15-7-1991

[புலோலி] வடமராட்சி கிழக்குப்பகுதியில் கடந்த மூன்று தினங்களாக கடல் பகுதியிலிருந்தும் வானத்திலிருந்தும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனையிறவிலிருந்தும் ஷெல் தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

அனுராதபுரத்தில் இராணுவ காவல் அரண் தாக்கப்பட்டது

(கொழும்பு) அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள தெமட்ட வெவ பகுதியில் உள்ள இராணுவ காவல் நிலையம் ஒன்றை நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் தாக்கியதாக

(4-ம் பக்கம் பார்க்க)

ஷெல் தாக்குதலில் பெண் பலி

(வட்டுக்கோட்டை) காரைநகரிலிருந்து சிறீலங்கா இராணுவத்தினரால் ஏவப்பட்ட ஷெல் பொன்னாலையில் விழுந்து வெடித்ததில் பெண் ஒருவர் பலியானார். ஐந்து பேர் காயமடைந்தனர்.

நேற்றுமுன்தினமிரவு காரைநகரில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் பொன்னாலை

(4-ம் பக்கம் பார்க்க)

★ கட்டைக்காடு கடற்பகுதி வழியாக ஆனையிறவைமீட்கவந்தபடை புலிகளின் பிடிக்குள் சிக்கியது!

கடற்படை படகும் மூழ்கடிப்பு

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவ முகாமை விடுதலைப்புலிகளின் பிடியிலிருந்து மீட்டெடுக்கும் நோக்கமாக நேற்று கட்டைக்காடு கடல் பகுதியிலிருந்து தரையிறங்க முயற்சித்த இராணுவம் புலிகளின் பிடிக்குள் சிக்கியுள்ளது.

கட்டைக்காடு என்ற இடத்தில் நேற்று நண்பகல் கடலில் தரித்து நின்ற 'வீரசூரியா' என்ற கப்பலிலிருந்து படகுகள் மூலம் இராணுவத்தினர் தரை இறங்க முயற்சித்தனர். இவர்களை நோக்கி விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை நடாத்தினர்.

விடுதலைப் புலிகளின் தாக்கு தலினால் கடற்படைப்படகு ஒன்று மூழ்கடிக்கப்பட்டது. தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் நிலை குலைந்தது.

நேற்று மாலை 5-30 மணியளவில் 2 ஹெலிகள், 3 குண்டு வீச்சு விமானங்கள், ஒரு

[4ம் பக்கம் பார்க்க]

வானிலிருந்து ஊரடங்கு கண்காணிப்பு!

(கொழும்பு) வடபகுதியில் ஊரடங்கு அமுலில் உள்ள வேளையில் வீதிகளில் செல்லும் வாகனங்கள் மீது விமானப் படை குண்டு வீசுவதாக கொழும்பில் இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

வடபகுதியில் பெரும்பகுதி புலிகளின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தாம் ஊரடங்கு சட்டத்தை வானிலிருந்தே கண்காணிக்க வேண்டியுள்ளதாகவும் அத்தலைமையக செய்தி தெரிவித்தது.

மேலும் ஆனையிறவு மோதல் முடிவுறும் வரை ஊரடங்கு சட்டம்வடபகுதியில்தொடர்ந்தும் அமுலிலிருக்குமென்றும் இராணுவம் தெரிவித்துள்ளது. (சி)

60 இராணுவம் பலி அரசு தகவல்

(கொழும்பு) ஆனையிறவு மோதலில் இதுவரை 60 இராணுவத்தினர் கொல்லப்பட்டும் 30-க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்மோதலில் தினமும் பத்து, பதினைந்து படையினர் கொல்லப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஆனையிறவு முகாமை புலிகளிடம் விட்டுக் கொடுக்கக்கூடாதென படையினர் மிகக்கடுமையாக யுத்தம் புரிவதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

நேற்று 16 படையினர் உயிரிழப்பு

(கொழும்பு) ஆனையிறவு இராணுவமுகாமில் நடைபெற்றுவரும் யுத்தத்தில் நேற்று மாத்திரம் 16 படையினர் கொல்லப்பட்டதாக அரசு தரப்பு அறிவித்

[4-ம் பக்கம் பார்க்க)

உப்பள பகுதி காவல் அரண் புலிகள் வசம்

(யாழ்ப்பாணம்) ஆனையிறவு உப்பளப்பகுதி காவல் அரண்கள் விடுதலைப் புலிகளிடம் வீழ்ந்துள்ளன.

நேற்றுமுன்தினமிரவு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தீவிர தாக்குதலின் பின்னர் ஆனையிறவு உப்பளப்பகுதியிலிருந்த பல காவலரண்கள் விடுதலைப்புலிகள் வசம் வீழ்ந்துள்ளன.

(4-ம் பக்கம் பார்க்க)

முல்லை-மட்டு மோதலில் வேங்கைகள் வீர மரணம்

(முல்லைத்தீவு) முல்லைத்தீவு மாவட்டத்தை சேர்ந்த பட்டிக்குடியிருப்பு என்ற பகுதியில் எதிர்பாராத விதமாக இராணுவத்துடன் ஏற்பட்டமோதலில் விடுதலைப் புலிகளின் தாக்குதலை சேர்ந்த சிவராசா சிவசம்பு (வயது 32) என்ற போராளி வீரமரணமடைந்தார். இவருடன் தம்பிராசா ஈஸ்வரன்

(4-ம் பக்கம் பார்க்க)

குண்டு வெடிப்பு

சந்தேகநபரைத் தேடி வலைவிரிப்பு

(கொழும்பு) கொழும்பு கூட்டுப்படைத் தலைமை அலுவலக குண்டு வெடிப்புக்கும் முன்னாள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னவின் கொலைக்கும் காரணமென சந்தேகிக்கப்படும் குண்டு தயாரிப்பு நிபுணரான ரவிக்குமார்

(4ம்பக்கம் பார்க்க)

பிரதான முகாம் மீது புலிகள் ஆக்ரோஷமான தாக்குதல்

[யாழ்ப்பாணம்) ஆனையிறவுப்பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் - இராணுவத்தினருக்குமிடையில் நடைபெற்றுவரும் கடும் மோதலில் விடுதலைப் புலிகள் பிரதான முகாம் நோக்கி ஆக்ரோசத் தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர்.

பிற்பகல் வேளையில் பிரதான முகாம் மீது பகிலன் ஷெல், மோட்டார் குண்டுகள் உட்பட மற்றும் சகல ஆயுதங்கள் மூலம் மூன்று பகுதிகளிலிருந்தும் விடுதலைப்

(4ம் பக்கம் பார்க்க)

சிகிச்சைபெற முடியாது சிப்பாய்கள் மரணம்

(கொழும்பு) ஆனையிறவில் விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா படையினருக்குமிடையே இடம் பெற்றுவரும் கடும் சமரில் காயமடைந்த சிறீலங்கா இராணுவத்தினர் பலர் அவசர மருத்துவ சிகிச்சை பெறமுடியாத நிலையில் இராணுவ முகாமுக்குள்ளேயே பலியானதாக தெரிவிக்கப்படுகிறது. படுகாயமடைந்த இராணுவத்தினருக்கு சத்திர சிகிச்சை தேவைப்பட்டதாகவும் ஆனால் விடுதலைப்புலிகள் முகாமைச் சுற்றி கடுமையான தாக்குதல்களை மேற்கொண்டுவருவதால்

[4-ம் பக்கம் பார்க்க]

தென்மராட்சி ஷெல் வீச்சில் ஐவர் காயம்

[யாழ்ப்பாணம்] நேற்று இரவு 8-30 மணியிலிருந்து 8-50மணிவரை பலாலியிலிருந்து தென்மராட்சிப் பகுதிகளான கொடிகாமம்,

[4-ம் பக்கம் பார்க்க]

வரி விளம்பரம்

"மீரா நாவல்கள்"

பரிசளிக்கக்கூடியவை, சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை', இனவிடுதலையை மையமாக 'சங்கரன்', 'அக்கினி', 'மூள் முடி மன்னர்கள்' இன்னும் நெஞ்சைத் தொடும் பத்து நாவல்களும் விற்பனையாகின்றன.
(சி 4988)

நாடக நூல்

"இன்று தமிழில் வானொலி நாடகம்" எழுதுபவர்களில் தலைசிறந்தவர்எனறு விமர்சகர் K. S. சிவகுமாரனால் பாராட்டப்பட்ட அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் 19 நாடகங்கள்: கெட்டிக்காரர்கள்: 25/- முதலாம்பிள்ளை: 30/-
(சி-4894)

திரவ சவர்க்காரம்

சகல தேவைக்குமான அழுக்கு போக்கி மில்க்வைற் திரவ சவர்க்காரம் [Liquid Soap] ½ போத்தல் ரூபா 45/- மட்டுமே. லேபலுடன்கூடிய வெற்றுப் போத்தல்ஒவ்வொன்றுக்கும் 2/- வற்பனை விலையில் தள்ளுபடி. (எ-1436)

முகாமைத்துவ கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ். கல்வித் திணைக்கள முகாமைத்துவ நிலையம் நடாத்தும் 2ம் தர அதிபர்களுக்கான முகாமைத்துவக் கருத்தரங்கு இன்றுதொடக்கம் 19ம் திகதிவரை கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

பயிற்சின்போது விரிவுரை, செயலமர்வு, கலந்துரையாடல், பாடசாலை தரிசித்தல் ஆகியன இடம்பெறவுள்ளன. (152)

அன்பளிப்பு

(வேலணை)

ஆசிய அபிவிருத்தி நிதியத்தினர் யாழ். மாநகர நூல் நிலையத்திற்கு பல பெறுமதியான நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.

இந்த நூல்கள் இம்மாதம் 17-ம் திகதி யாழ். மாநகர சபை ஆணையாளர் திரு வி. பொ. பாலசிங்கத்திடம் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் கிளைச் சங்கத் தலைவர் நச்சினார்க்கினியனால் வழங்கப்படும். (75)

பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

சுகாதார தரிசிப்பாளர் பயிற்சி நெறி இன்று 15-ம் திகதி இணுவில் பயிற்சி நிலையத்தில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

யாழ். பிராந்தியத்தில் 25 பேர் மேற்படி பயிற்சி நெறிக்கு தெரிவுசெய்யப்பட்டிருக்கிறார்கள்.

யாழ். பிராந்தியத்திலுள்ள பொது சுகாதார பரிசோதகர்களின் வெற்றிட பற்றாக் குறையைத் தீர்க்குமுகமாக பிரிட்டிஷ் சிறுவர் பாதுகாப்பு நிலையத்தின் உதவியுடன் சுகாதார தரிசிப்பாளர் பதவிகள் உருவாக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது [153]

இரத்ததானம்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கிக்குத் தொடர்ந்தும் பொதுமக்கள் இரத்தம் வழங்கி வருகின்றனர்.

குருநகர் சென் றெரிக்ஸ் சனசமூக நிலையத்தைச் சேர்ந்த 40 உறுப்பினர்கள் நேற்றுமுன தினம் இரத்ததானம் செய்துள்ளனர்.

பொது நிறுவனங்களின் பிரதிநிதிகள், மாணவர்கள் உட்பட பலர் இரத்ததானம் வழங்குவதற்குத் தமது பெயர்களைப் பதிவு செய்தவண்ணமுள்ளனர். (56)

இயங்காத நிலையிலிருக்கும் முல்லைத்தீவு வைத்தியசாலை

[மாங்குளம்]

முல்லைத்தீவு அரசினர் வைத்தியசாலை கடந்த பத்து மாதங்களுக்கு மேலாக இயங்காதிருக்கிறது.

இவ்வைத்தியசாலையிலுள்ள மருந்து வகைகள், எக்ஸ்ரே கருவிகள் மற்றும் பல லட்சம் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் பலவும் சேதமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. [150]

குடியிருப்பாளர் பதிவு கொழும்பில் ஆரம்பம்

(கொழும்பு)

கொழும்பு மாளிகாவத்தையில் நிரந்தரமாக வசிக்கும் சிங்களவர். தமிழர், முஸ்லிம்கள் அனைவரையும் பதிவுசெய்ய பொலிஸார் நடவடிக்கைஎடுத்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாளிகாவத்தைப் பொலிஸார் வீடு வீடாகச் சென்று பாதுகாப்பு அமைச்சு வெளியிட்டுள்ள ஆட்பதிவு பத்திரங்களை விநியோகித்து அனைவரையும் பதிவு செய்யுமாறு கேட்டுள்ளனர்.

குண்டு வெடிப்பு தொடர்பு ஐவர் தேடப்படுகின்றனர்!

[கொழும்பு]

கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பு தொடர்பாக மேலும் ஐவர் தேடப்படுகின்றனர்.

ரவிக்குமாரன், அம்மா உட்பட இந்த ஐவரையும் பிடித்தால் ரஞ்சன் விஜயரத்தனகொலை உட்பட பல தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுகாதார ஊழியருக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு

[பண்டத்தரிப்பு]

பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரச ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கும் அரசின் சுற்று நிருபத்தின் பிரகாரம் யாழ் சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு கடந்த 1988 ம் ஆண்டு ஜனவரி தொடக்கம் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதற்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட காலப்பகுதியில் கடமையாற்றிய ஊழியர்களினதும், இடமாற்றில் சென்றவர்கள், ஓய்வுபெற்றுச் சென்றவர்கள் ஆகியோரினதும் தினவரவு பற்றிய அறிக்கைகளை இதன்பொருட்டு தமது அலுவலகத்திற்கு தாமதமின்றி அனுப்பிவைக்குமாறு யாழ் பிரதேச சுகாதார சேவைப்பணிப்பாளர் தமது பிரிவிலுள்ள நிறுவனங்களின் தலைவர்களுக்கு அனுப்பிவைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றில் கேட்டுள்ளார் [72]

ரோசி மலர்

15 - 07 - 1991
திங்கட்கிழமை

சதுர்த்தி மாலை 5-09வரை, மகம மு. ப 11-36 வரை, மரணயோகம், சதுர்த்தி விரதம், இராகுகாலம் காலை 7-30 முதல் 9-00வரை, சுபநேரம் பகல் 12-00 முதல் 1-30 வரை.

மேடம்: இல்லாள் துன்பம், வாய்த் தர்க்கம், தொழில் பதட்டம்.

இடபம்: மகிழ்ச்சியற்ற போக்கு. குடும்பப் பிரிவு, அலைச்சல்.

மிதுனம்: சுபகாரியம், விருந்து வைபவம், சகோதர உதவி.

கடகம்: ஏமாற்றப்படுதல், கைப்பொருள் நழுவல், கடன்.

சிங்கம்: தைரியம், குடும்ப மகிழ்ச்சி, வாக்குவன்மை.

கன்னி: போட்டி உருவாகுதல், ஆடம்பரச் செலவு, அமைதியின்மை.

துலாம்: பிரயத்தனம், முதலீடு பாதிப்பு, அந்நியருதவி.

விருச்சிகம்: உடல் ரோகம், பெண்தொல்லை, குடும்பக் கஸ்டம்.

தனுசு: ஆசாரக்குறைவு, பொய்பேசுதல், பயண அலைச்சல்.

மகரம்: பழிவாங்கல், காரியவிக்கினம், தொழில் மாற்றம்.

கும்பம்: நண்பரி சகாயம், நற்செய்தி, திருமணச் செலவுகள்.

மீனம்: குடும்பச் சந்தோசம், மனைச் சிறப்பு, மாமனுர் வருகை.

- ஜோஸ்யர்

படிவங்கள் தட்டுப்பாடு

[மாங்குளம்]

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள பல அலுவலகங்களில் அத்தியாவசியமாகத் தேவைப்படும் பல படிவங்கள்கூடத் தட்டுப்பாடாகவிருந்து வருகிறது.

இதனால் உடனுக்குடன் வேண்டிய பல முக்கிய கடமைகளை நிறைவேற்றமுடியாத நிலை பல திணைக்களங்களில் காணப்படுகிறது.

தட்டெழுத்துக் கடதாசி, ரோனியோ கடதாசி மற்றும் எழுதும் கடதாசிகள், பேனை, பென்சில் போன்ற அலுவலக உபயோகத்துக்குத் தேவையானவை தீர்ந்துபோன நிலையில் பல திணைக்களங்கள் காணப்படுகின்றன. (150)

புதிய இணைப்பாளர்

(வட்டுக்கோட்டை)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் செயற்பாடுகளைப் பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிப்பதற்காக இணைப்பாளர் ஒருவர் புதிதாக நியமிக்கப்படவுள்ளார்.

இப்புதிய நியமனத்தைப் பெறும் இணைப்பாளர் சனசமூக நிலையங்களுக்குச்சென்று சனசமூகநிலையங்களின் செயற்பாடுகளை அவதானித்து குறைநிறைகளைக் கண்டுபிடித்து அவற்றை நிவர்த்தி செய்யும்வகையில் மேலிடத்துக்குமாதந்தோறும் அறிக்கை சமர்ப்பிப்பாரெனத் தெரிகிறது. (139)ப

வீர வேங்கைகளுக்கு அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

ஆனையிறவு இராணுவ முகாம் தாக்குதலின் போது வீரமரணமடைந்த வேங்கைகளுக்கு பண்டத்தரிப்பு, சங்கானை, சண்டிலிப்பாய் ஆகிய பல்வேறு இடங்களிலும் தோரணங்கள் கட்டப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடைகள், வர்த்தகஸ்தாபனங்கள் ஆகியவற்றில் கறுப்புக் கொடிகளும் தொங்கவிடப்பட்டுள்ளன.

முறைசாராக் கல்வி இறுதிப்பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய முறைசாராக் கல்விப் பிரிவிலுள்ள சகல பாடநெறி மாணவர்களுக்கும் இறுதிப் பரீட்சை 20-07-91 தொடக்கம் நடைபெறவுள்ளது. எனவே மாணவர்களும், போதனாசிரியைகளும் 15-07-91 [இன்று] திங்கட்கிழமை காலை 9-30 மணிக்கு பாடசாலைக்குச் சமுகம் அளிக்கும்படி அதிபர் கேட்டுள்ளார்.

கொடுப்பனவு கோராத ஓய்வூதியர் பட்டியல்

[மானிப்பாய்]

யாழ். செயலக ஓய்வூதியப் பிரிவில இதுவரை கொடுப்பனவு கோரப்படாத [கோவை திறக்கப்படாத] சுமார் 200 பேரின் பெயர்ப் பட்டியல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளன,

கொழும்பிலுள்ள ஓய்வூதியத் திணைக்களப் பணிப்பாளரிடமிருந்து இவ் ஓய்வூதியக் கொடைகள் யாழ் செயலக ஓய்வூதியப்பிரிவுக்கு கிடைக்கப் பெற்று சிலமாதங்களாகியும் இதுவரை இதனைப்பெற்றுக் கொள்ள உரியவர்கள் முன்வரவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது. [71]

மட்டு. மாவட்டத்தில் நெற்செய்கை பாதிப்பு

(மட்டக்களப்பு]

மட்டக்களப்பு மாவட்டத்தில் இவ்வருடம் காலபோக நெற்செய்கை 8950 ஹெக்டேயரில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எனினும் கடந்த ஒருமாத காலமாக மட்டக்களப்பு மாவட்ட வயற் பிரதேசங்களில் நிலவிய பதற்றம் காரணமாக பெரும்பாலான விவசாயிகள் தமது விதைத்த வயல்களுக்கு செல்ல அஞ்சுகிறார்கள்.

இதனால் விவசாயிகளின் வயல்களுக்கு நீர்ப்பாசனம் பசளை, கிருமிநாசினிகள் வழங்காத நிலையினால் பயிர்கள் கருகிப்போவதாக கூறப்படுகிறது. (153)

ஊரடங்குச் சட்டத்தினால் கப்பலில் வந்த தபால்கள் விநியோகிக்கப்படவில்லை

[புலோலி]

யாழ்ப்பாணத்துக்குக் கொண்டுவரப்பட்ட தபால் பொதிகள் யாவும் ஊரடங்குச் சட்டம் அமுலிலிருப்பதால் விநியோகிக்கப்படாமல் பருத்தித்துறை தபாலகத்தில் தேங்கியுள்ளன.

"மெர்லி குமாரி" என்ற கப்பலில் கொண்டுவரப்பட்ட தபால்பொதிகள் யாவும் இறக்கப்பட்டு பருத்தித்துறை தபாலகத்தில் தேக்கி வைக்கப்பட்டுள்ளன. ஊரடங்குச் சட்டம் நீக்கப்பட்டபின்னரே தபால் விநியோகம் நடைபெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இதே நேரம் ஊரடங்குச்சட்டம் அமுலிலுள்ளவேளை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்தடைந்த கப்பலிலிருந்து பொருட்கள் இறக்கப்படவில்லை. கப்பல் காங்கேசன் துறைக்குச் சென்றுள்ளது. (61)

கிளிநொச்சிப் பகுதியில் மூளைக்காய்ச்சல் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

கிளிநொச்சிப் பகுதியில் மூளைக்காய்ச்சலினால் மலேரியா நோய் மிகத் தீவிரமாகப் பரவிவருவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

நூற்றுக்கு அதிகமானவர்கள் இந்த நோய்களினால் பாதிக்கப்பட்டு கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளதாகவும் சிலர் வாட்டுகளில் தங்கிச் சிகிச்சைபெற்று வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு மூளைக்காய்ச்சல் காரணமாக ஐந்துக்கும் மேற்பட்ட குழந்தைகள் இறந்தது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கிளிநொச்சிப் பகுதியில் நுளம்புகளின் தொல்லை அதிகரித்துள்ளது. இவற்றை ஒழிப்பதற்குரிய மலத்தியோன் மருந்துஇல்லாததினால் இவற்றை அழிக்க முடியாதிருப்பதாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் தற்போதைய உஷ்ணம் காரணமாக வேறு தொற்றுநோய்களும் பரவுவதாகவும் தெரியவருகின்றது. (154)

பிறப்பு அத்தாட்சி விண்ணப்பங்கள்

(மானிப்பாய்)

கடவுச்சீட்டு சம்பந்தமான தேவைகளுக்கு யாழ். பிறப்பு, இறப்புப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதிக்கு விண்ணப்பிப்போர் விண்ணப்பத்தின் மேல் "கடவுச்சீட்டு பெறுவதற்கு" எனத் தெளிவாக எழுதுமாறு மாவட்ட மேலதிக பதிவாளர் அறிவித்துள்ளார்.

இவ்வாறு எழுதப்படும் விண்ணப்பங்கள் தரம் பிரிக்கப்பட்டு இவர்களுக்கு வழங்கப்படும். பிறப்பு அத்தாட்சிப் பத்திரப் பிரதிகளில் யாழ் அரச அதிபர் அல்லது மேலதிக அரசாங்க அதிபர் இனிமேல் மேலொப்பம் இட்டு வழங்குவதற்காகவே இந்த நடவடிக்கை என்று தெரிவிக்கப்படுகிறது.

புலிகளின் பிடிக்குள் சிக்கியுள்ள ஆனையிறவு இராணுவ முகாம்

ஆனையிறவு தடைமுகாம் 1958-ம் ஆண்டுக்கு முன்பு சுங்க இலாகாவின் தடைமுகாமாகவும் வனபரிபாலனத் திணைக்களத்தின் தடைமுகாமாகவும் விளங்கியது.

இராணுவ முகாம்

1958 ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து இத் தடைமுகாம் அருகில் சிறியளவில் சிறிலங்கா இராணுவ முகாம் அமைக்கப்பட்டது. ஆனையிறவு கடலேரியின் அருகிலுள்ள வாடிவீட்டுக்கு அருகாமையில் இந்த இராணுவ முகாம் உருவாக்கப்பட்டது.

டச்சுக் கோட்டை

ஆனையிறவு வாடிவீடு முன்பு டச்சு, பிரிட்டிஷ் ஆகியவர்களின் காவற்கோட்டையாக விளங்கியது. இந்தக் கோட்டை டச்சுக்காரர்களினால் 1760 ம் ஆண்டு கட்டப்பட்டது ஆனையிறவு யாழ் குடாநாட்டின் கேந்திரமுக்கியத்துவம் வாய்ந்த இடமாக இருந்தகாரணத்தினால் டச்சுக்காரர் இந்த இடத்தில் கோட்டையை அமைத்தார்கள்.

1961ம் ஆண்டு வடக்கு-கிழக்குப் பகுதிகளில் நடைபெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தைத் தொடர்ந்து இந்த இராணுவ முகாம் நிரந்தரமான முகாமாக மாறத் தொடங்கியது.

மக்கள் பாதிப்பு

இந்த முகாமிலிருந்த இராணுவத்தினர் கள்ளக்கடத்தல் கள்ளக்குடியேற்ற தடுப்பு வேலைகளில் ஈடுபடுத்தப்பட்டனர், தாளையடி. இயக்கச்சி ஆகிய இடங்களில் தற்காலிக இராணுவ முகாம்களும் அமைக்கப்பட்டது. இந்த காலகட்டங்களில் பச்சிலைப் பள்ளி மக்களும் வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களும் பெருமளவில் ராணுவத்தினால் பாதிக்கப்பட்டார்கள்.

3 ஜே. வி. பி. யினர் சுட்டுக்கொலை

1971 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ந் திகதி ஆனையிறவு தடைமுகாமை நோக்கி ஜீப்பில் பயணம் செய்துகொண்டிருந்த ஜே. வி. பி யை சேர்ந்த மூவரும் ஒரு ஜீப் சாரதியும் ஆனையிறவு தடைமுகாமில் நிறுத்தப்பட்டு பின்னர் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்கள். ஜே. வி. பி ஐ சேர்ந்த மூவரில் இருவர் காரைநகர் கடற்படைவீரர்களாவர்.

பரிசோதனை

ஆனையிறவு தடைமுகாம் பொலிஸ் - இராணுவ கூட்டு தடைமுகாமாக மாறத் தொடங்கியது. வடபகுதியிலிருந்து ஆனையிறவுக்கு தெற்கு நோக்கிச் செல்லும் பயணிகள் வாகனங்களும் தெற்கிலிருந்து ஆனையிறவு ஊடாக வடபகுதிக்கு வரும் பயணிகள் வாகனங்களும் தடுத்து நிறுத்தப்பட்டு ஒவ்வொருவராக பரிசோதிக்கப்பட்டார்கள். இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை அனுபவித்தார்கள்.

நிரந்தர கட்டிடம்

1977-ம் ஆண்டு இனக்கலவரத்தைத் தொடர்ந்து இம் முகாம் மேலும் பலப்படுத்தப்பட்டது. இராணுவ முகாமில் நிரந்தர கட்டிடங்கள் இந்த கால கட்டங்களில் அமைக்கப்பட்டது.

1958 - 1977 ஆண்டுவரையும் வாடிவீடு ஆனையிறவு இராணுவமுகாமுக்கு அருகிலுள்ள பழைய கோட்டை கட்டிடத்தில் இயங்கிவந்தது.

ஆங்கிலத்தில் 'எலிபன்ட் பாஸ்' என்றழைக்கப்பட்ட ஆனையிறவு, சிங்களத்தில் 'அலிமங்கடவ' என பெயர்மாற்றம் அடையத் தொடங்கியது. வாடிவீட்டின் பெயரிலும், இராணுவமுகாமின் பெயரிலும் முதலில் ஆரம்பிக்கப்பட்ட அலிமங்கடாவ என்ற பெயர் ஆனையிறவு உப்பளத்தின் பெயரிலும் மாற்றமடையத் தொடங்கியது.

சித்திரவதைக் கூடம்

1979 ம் ஆண்டு ஜூலை மாதம் 11 ம் திகதியைத் தொடர்ந்து ஆனையிறவு இராணுவ முகாமும் வாடிவீடு வரை விஸ்தரிக்கப்பட்டது.

வாடிவீடு சித்திரவதைக் கூடமாக இந்தக் காலகட்டத்தில் இயங்கத் தொடங்கியது. இங்குதான் பல தமிழ் இளைஞர்கள் படையினரின் கடுமையான சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

இராணுவ முகாமாக செயற்படுவதற்கு முன் இம் முகாம் பொலிஸ் நிலையமாக செயற்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

கேந்திர முகாம்

தமிழீழ விடுதலைப் போராட்டம் வளரத் தொடங்க இம் முகாம் மிகவும் பலமுள்ளதாகவும் சுமார் இருமைல் பரப்பளவாக விஸ்தரிக்கப்பட்டிருந்தது. வாடிவீடு பிரதான முகாமாக அமைந்திருந்தது,

ஜே. ஆர். அரசு காலத்தில் ஹெலிகள் இறங்கக் கூடிய விதத்தில் இம்முகாம் முக்கிய கேந்திரமுகாமாக மாறியது.

1979லிருந்து 1987மஆண்டு வரை வாகனங்களை தீவிரமாக சோதனை போடப்படுவதும் பொருட்களை இறக்கி ஏற்றுவதும் பயணம் செய்யும் தமிழர்கள் தாக்கப்படுவதும், துன்புறுத்துவதும், பல இளைஞர்களை கைது செய்து முகாம்கொண்டு செல்லப்பட்டு சித்திரவதைப் படுத்துவதுமாக இம்முகாம் அமைந்திருந்தது.

ஆனையிறவிலிருந்து படையினர் பயணிகள் மற்றும் வாகனங்கள் மீதும் ஷெல் தாக்குதல்களையும், துப்பாக்கிப்பிரயோகத்தினையும் மேற்கொண்டனர்.

இந்தியப் படை

1987ம் ஆண்டு இந்திய அமைதிப்படையினர் வந்தபோதும் ஆனையிறவுப்பகுதி முகாமினுள் அவர்களும் முகாமமைத்து இருந்தனர்.

புலிகள் முற்றுகை

1990ம் ஆண்டு யூன் மாதம் 10ம் திகதி இராணுவத்தினருக்கும் - விடுதலைப்புலிகட்கும் ஏற்பட்ட கடும் யுத்தத்தினைத் தொடர்ந்து இம் முகாம் புலிகளின் முற்றுகைக்குள் இருந்து வந்துள்ளது.

1990ம் ஆண்டு யூலை மாதப் பகுதியில் கிளிநொச்சி இராணுவம் வாபஸ் பெற்று ஆனையிறவு முகாமிற்குள் முடங்கியது. அந்நேரத்தில் தரையிறக்கப்பட்ட (குறிஞ்சாத்தீவில்) படையினரும் பரந்தனில் நிலை கொண்டிருந்த இராணுவத்தினரும் இம்முகாமினுள்ளே சென்றனர்.

3 1/2 மைல் பிரதேசம்

பின்பிப்பகுதியில் 3½ மைல் பிரதேசத்தினை ஆக்கிரமித்து தனது பிடிக்குள் வைத்திருந்தனர். குறிஞ்சாத்தீவிலிருந்து சுமார் 1½ மைல் பிரதேசமும், உமையாள்புரம் எல்லையிலிருந்து 1½ மைல் பிரதேசமும், உப்பளம் வீதி, மணல்வீதி அண்டிய எல்லை வரை விஸ்தரிக்கப்பட்டு உட்புறத்திலும் வெளிப்புறத்திலும் பல காவலரண்கள் பலமாகமாக அமைக்கப்பட்டு தங்களைப்பலப்படுத்திக்கொண்டனர்.

தோல்விகள்

படையினர் பல தடவைகளில் யாழ்ப்பாண பாதையூடாக விமானத்தாக்குதல் மூலம் முன்னேற முயற்சித்து பெரிய தோல்விகளை சந்தித்துள்ளனர்.

பல ராணுவம் பலி

ஒரு வருடத்திற்கு மேலாக பல தடவைகள் புலிகளின் தாக்குதலுக்கு இம்முகாம் இலக்காகி பல இராணுவத்தினர் கொல்லப்பட்டும் பலர் காயமடைந்துமுள்ளனர்.

ஒரு வருடகாலமாக புலிகளின் கடும் தாக்குதல்களை சமாளிக்க முடியாத நிலையில் திணறிக்கொண்டிருக்கும் படையினர் என்றோ ஒரு நாள் புலிகள் இம்முகாமினை கைப்பற்றுவார்கள் என்று ஏங்கிக்கொண்டிருந்தார்கள்.

பெரும் போர்

இம்முகாமினை நோக்கி புலிகளின் தாக்குதல் அதிகரிக்க படையினர் அச்சம் கொள்ளத்தொடங்கினர்.

இறுதியில் ஆனையிறவு முகாமை நிர்மூலமாக்கும் முயற்சியில் விடுதலைப்புலிகள் யூலை 10ம் திகதி பெரும் தாக்குதல்களை தொடுத்து பெரும் போர் ஒன்றினை நடாத்திக் கொண்டிருக்கின்றனர்.

புலிகள் வெற்றி கொள்வர்

வடபகுதியில் ஒரு வருட யுத்தத்திற்குள் ஐந்தாவது முகாமினை விடுதலைப்புலிகள் தாக்குதல் நடாத்தி தகர்த்தெறிந்து வெற்றிகொள்வர் என்றே முழு உலகமும் பார்த்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் ஆனையிறவிலுள்ள ஐந்து இராணுவ முகாம்களில் உல்லாசவிடுதி உப்பள இராணுவ முகாம்கள் புலிகளின் வசம் வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

(153 - 56)

"நடைபெறும் யுத்தத்திற்கு மக்கள் பங்களிப்பு தேவை"

அரசியல் பொறுப்பாளர் மூர்த்தி கோரிக்கை

(கொக்குவில்)

"இன்று மிகப்பெரிய யுத்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. இதற்குச் சகல தரப்பினரின் பங்களிப்பும் தேவையாகும்" என்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. மூர்த்தி தெரிவித்தார்.

வடபிராந்திய சுருட்டுத் தொழிலாளர் சங்கம் கொக்குவிலில் நடாத்தும் இலவசதையல், தட்டச்சுப் பயிற்சி வகுப்புகளை ஆரம்பித்து வைத்துப் பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது: ஆனையிறவில் எதிரியின் முக்கியமான காவலரண்களை அழித்தும், ஆயுதங்களைக் கைப்பற்றியும் எமது வீரர்கள் முன்னேறிக்கொண்டிருக்கிறார்கள். எமது வீரர்களுக்கு வேண்டிய உதவிகளைப் பொதுமக்கள் வழங்கி அவர்களை உற்சாகப் படுத்தவேண்டும்.

உணவுக்காகக் கப்பலை நம்பியிராமல் சுய உற்பத்திகளைப் பெருக்கி எமது தேவைகளைப் பூர்த்தி செய்யவேண்டும்.

ஒரு அடிநிலத்தைக்கூட வீணாக்காது உப உணவு உற்பத்தியில் ஈடுபட்டு எமது சுய உணவை உற்பத்தி செய்தல் வேண்டும். மின்சாரம், விறகு போன்ற வற்றையும் எமது மண்ணில் உற்பத்தி செய்யமுடியும்.

(135)

மேலும் 30 நாட்களுக்கு நளினி, முருகன் காவலில்

(சென்னை)

ராஜீவ் கொலை தொடர்பாக கைதுசெய்யப்பட்ட நளினி, முருகன் ஆகியோரை மேலும் முப்பது நாட்களுக்கு காவலில் வைக்கப்படவுள்ளனர்.

இந்த சந்தேகநபர்களை மேலும் முப்பது நாட்களுக்கு காவலில் வைப்பதற்கு செங்கல்பட்டு நீதவான் வடிவேல் இரத்தினம் அனுமதி வழங்கியுள்ளார்.

திலீபன் நினைவாக நடைபெறும் வட்ட அவை மட்டத்திலான தடகள போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

திலீபன் நினைவாக நடத்தப்படும் தடகள விழாவின் வட்டவை மட்டப் போட்டிகள் இம்மாதம் 20-ம், 21-ம் திகதிகளில் சண்டிலிப்பாய், கோப்பாய், நல்லூர் ஆகிய வட்டவைகளிலும் 25ம், 26ம் திகதிகளில் பளை, உடுவில் சாவகச்சேரி கரவெட்டி ஆகியவட்டவைகளிலும் 27ம், 28ம் திகதிகளில் பருத்தித்துறை, யாழ்ப்பாணம், தெல்லிப்பளை, மருதங்கேணி, சங்கானை ஆகிய வட்டவைகளிலும் நடைபெறவுள்ளன.

சண்டிலிப்பாய் வட்டவைப் போட்டிகள் பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரியிலும், கோப்பாய் வட்டவைப் போட்டிகள் அத்தியார் இந்து மைதானத்திலும், நல்லூர் வட்டவைப் போட்டிகள் யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்திலும், பளை வட்டவைப் போட்டிகள் இத்தாவில் விளையாட்டு மைதானத்திலும், உடுவில் வட்டவைப்போட்டிகள் கந்தரோடை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்திலும், சாவகச்சேரி வட்டவைப் போட்டிகள் மட்டுவில் மகாவித்தியாலயத்திலும், கரவெட்டி வட்டவைப் போட்டிகள் நெல்லியடி மத்தியமகாவித்தியாலயத்திலும், பருத்தித்துறை வட்டவைப் போட்டிகள் ஹாட்லிக் கல்லூரியிலும், யாழ். வட்டவைப் போட்டிகள் யாழ். புனித சம்பத்தரிசியார் கல்லூரியிலும், தெல்லிப்பளை வட்டவைப் போட்டிகள் மகாஜனக் கல்லூரியிலும், மருதங்கேணி வட்டவைப்போட்டிகள் செம்பியன்பற்று அரசினர் த. க. பாடசாலையிலும், சங்கானை வட்டவைப் போட்டிகள் அராலி மாவத்தை விளையாட்டு மைதானத்திலும் நடாத்தப்படவிருக்கின்றன.

அறிவுத்திறன் போட்டி

(யாழ்ப்பாணம்)

அறவழிப் போராட்டக்குழுவின் ஆதரவுடன் கல்வியைத் தொடர்கின்ற மாணவர்களுக்கிடையில் அறிவுதிறன் போட்டிகள் நடைபெறவுள்ளன.

பேச்சு, கட்டுரை, சித்திரம், பொது அறிவு, திருக்குறள் மனனம் ஆகியவற்றில் இப்போட்டிகள் நடத்தப்படவுள்ளன,

தமிழகத்தில் முகாம்களிலுள்ள இலங்கைத் தமிழர்களை வெளியேற்ற நடவடிக்கை

(சென்னை)

தமிழகத்தில் அகதி முகாம்களில் இருக்கும் இலங்கை தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதற்கான நடவடிக்கைகளை இந்திய-இலங்கை அரசாங்கங்கள் மேற்கொண்டுள்ளன.

இதன் முதல் நடவடிக்கையாக தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளின் பட்டியலொன்றை இந்தியா இலங்கையிடம் கையளித்துள்ளது.

பருத்தித்துறை இறங்குதுறை

அபிவிருத்தி திட்டத்துக்கு அரசு அனுமதி மறுப்பு

[கொழும்பு]

பருத்தித்துறையிலுள்ள இறங்குதுறையை ஆழமாக்கும் வேலையை மேற்கொள்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்க மறுத்திருக்கிறது.

மேற்படி இறங்குதுறையை அடிபதடி ஆழம் தோண்டி ஆழமாக்கும் வேலைத் திட்டம் ஒன்று அரசாங்கத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்தத் திட்ட வேலையைப் பரிசீலனை செய்த அரசாங்கம் பாதுகாப்பு அமைச்சின் அங்கீகாரத்துக்காக அதனை சமர்ப்பித்தது. ஆனால் பாதுகாப்பு அமைச்சு அந்தந் திட்டத்துக்கு அனுமதி வழங்க மறுத்து விட்டது.

பருத்தித்துறை இறங்குதுறையை ஆழமாக்கினால் வட பகுதிக்கு கூடுதலான அளவு உணவுப் பொருட்களை அனுப்ப முடியும் என்று சம்பந்தப்பட்ட திட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சாவகச்சேரி ஆகிய இடங்களை நோக்கி பத்துக்கும் மேற்பட்ட ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களில் ஐந்துக்கு மேற்பட்டோர் காயமடைந்தனர்.

திருமதி கனகேஸ்வரி கணபதிப்பிள்ளை [40 வயது) தாமோதம்பிள்ளைவீதி சாவகச்சேரி வலத்தீஸ்லூர் துநாயகம் [40 வயது கச்சாய்வீதி நுணாவில்] ஆகிய இருவரும் யாழ் போதனாவைத்தியசாலையில் 11-30 மணிக்கு அனுமதிக்கப்பட்டனர். மற்றும் மூவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைபெற்று வருகின்றனர். [56]

மரண அறிவித்தல்

சுப்பிரமணியம் ஞானசுந்தரம் (B. Sc.)

(விவசாய விஸ்தரிப்பு உத்தியோகத்தர், கிளிநொச்சி)

அனலைதீவைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி உருத்திரபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் ஞானசுந்தரம் 9-7-91ல் கனடாவில் காலமானார். இவர் சுப்பிரமணியம் விசாலாட்சி அவர்களின் சிரேஷ்ட புதல்வனும், புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா, செல்லம்மா அவர்களின் அன்பு மருமகனும், சரசு என்றழைக்கப்படும் தவமணிதேவியின் (ஆசிரியை, கனகாம்பிகை மகாவித்தியாலயம், கிளிநொச்சி) அன்புக் கணவரும், பிரதீப், பிரதீபா. பிரசன்னா ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரா (சுவிஸ்), சுசீலாம்பாள் (கனடா), சபாநாதன் (சிங்கப்பூர்). புவனாம்பாள் (கொழும்பு), வளர்மதி (சுவிஸ்), பிறேம்மதி (கனடா), சபேசன் (கொழும்பு) ஆகியோரின் மூத்ததமையனாரும், திலகவதி (கனடா). சிவசாமி (ராங் வியூ ஹோட்டல், லலிதா றேடிங் கொம்பனி கிளிநொச்சி), நடனசபாபதி (இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், கொழும்பு), இராசசிங்கம் (எயார் லைன் றேடஸ், கொழும்பு), மங்கையர்க்கரசி (ஸ்ரீனிவாசன் அன்கோ லிமிட்டெட், கொழும்பு). ஞானசீலன் (கனடா), குணசீலன் (கனடா) ஆகியோரின் மைத்துனருமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் கனடாவினுள்ள ரொரன்ரோவில் நடைபெற்றதென்பதை ஆழ்ந்தகவலையுடன் தெரிவித்துக் கொள்கிறோம். இதகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறோம்.

தகவல்:
செ. நடனசபாபதி
(மைத்துனர்)

இல. 32. மருதடி வீதி,
நல்லூர்,
யாழ்ப்பாணம். (சி 4993)

திரு. அருணாசலம் சண்முகம் மகாதேவா

காரைநகர் வலந்தலையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், யாழ். நகரை வதிவிடமாகக் கொண்ட திருவாளர் அருணாசலம சண்முகம் மகாதேவா அவர்கள் 13-7-91 சனிக்கிழமை மாலை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் அ. ச. மகாதேவா ஆபரணமாளிகையின் முன்னாள உரிமையாளரும், யாழ். றோட்டரிக்கழகச் சிரேட்ட உறுப்பினருமாவார்.

இவர் திருமதி சுந்தரம்மாவின் அன்புக்கணவரும், திரு. ஜெயதேவன் (சண்முகம் ரேட்ஸ், பிரதான வீதி, யாழ்ப்பாணம் உரிமையாளர்) செல்வி கௌரியினதும் அன்புத்தந்தையாரும், திருமதி ஞானேஸ்வரி ஜெயதேவனின்மாமனாரும. அருட்குமரன், அஜந்தன் ஆகியோரின் அருமைப்பேரனாரும், திருமதிகள்: பரமு சரஸ்வதி, சாரதா சம்பந்தன், காலஞ் சென்றவர்களான திரு. தர்மா (விமானப் பொறியியலாளர்), மகானந்தன் ஆகியோரின் அன்புச்சகோதரரும், டாக்டர் N.T. சம்பந்தன் திருமதிகள்; சிவனேஸ்வரி மகானந்தன், புஸ்பவதிசர்வானந்தா, அமராவதி, கதிரவேலு (மலேசியா), ஞானக்கிளி நவரத்தினம், காலஞ்சென்றவர்களான திரு க. பரமு, திரு. ஜெயசீலன், திருமதி புனிதவதி தர்மா ஆகியோருடைய அன்பு மைத்துனரும், திரு. ச. புவனசுந்தரம் (பிரசித்த நொத்தாரிசு திருநெல்வேலி) அவர்களின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 15-7-91 திங்கட்கிழமை மு. ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காகக் கோம்பயன்மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் தயவுடன் அறியத்தருகின்றேன்.

தகவல்; திரு. ம. ஜெயதேவன்
105, 4ம் குறுக்குத் தெரு, (மகன்)
யாழ்ப்பாணம். (சி-4992)

பிரதான முகாம்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் கடும் தாக்குலை மேற்கொண்டுள்ளனர்.

முகாம் பகுதிகள் பசிலன் ஷெல் தாக்குதலுக்கு இலக்காகியுள்ளதால் முகாமுக்குள் முடங்கியிருக்கும் படையினர் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத நிலையில் அகப்பட்டு தப்பமுடியாது உள்ளனர்.

விமானங்கள் குண்டுவீச்சுத் தாக்குதல்களை நள்ளிரவுக்கு மேல் 12-15 மணிவரை நடத்தின. (56)

அநுராதபுரத்தில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கொழும்பில் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தத் தாக்குதல் சம்பந்தமான சேதவிபரங்கள் பற்றிய விபரங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை. [க]

சிகிச்சைபெற

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஹெலிகள் இறங்க முடியாத நிலையில் காயமடைந்தவர்களை தென்னிலங்கை ஆஸ்பத்திரிகளுக்கு எடுத்துச் செல்ல முடியாத நிலையில் அவர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதேவேளையில் இந்தச் சமரில் காயமடைந்த, காயமடைந்துவரும் மேலும் பல இராணுவத்தினருக்கு அவசர மருத்துவ சிகிச்சை பெறக் கூடிய சாத்தியக்கூறுகள் இல்லாததால் மேலும் பல சிப்பாய்களுக்கு உயிரிழப்பு ஏற்படுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (மா)

உப்பளப் பகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் பிரதான இராணுவ முகாமின் சில கட்டடங்களும் சேதமடைந்துள்ளன.

விமானங்கள், ஹெலிகள் இடைவிடாது நடாத்திய தாக்குதல்களுக்கு இடையே விடுதலைப்புலிகள் இராணுவத்துக்கு அருகிலிருந்து கடும்தாக்குதல்களை மேற்கொண்டுவந்தனர். சில மணிநேரத் தாக்குதலின் பின்னர் உப்பளப்பகுதி காவல் அரண்கள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

காவல் அரண்களிலிருந்த 100 க்கு மேற்பட்ட இராணுவத்தினர் பலியானார்கள். அத்துடன் பலர் காயமடைந்துள்ளனர். இறந்த இராணுவத்தினரின் உடல்கள் விடுதலைப் புலிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளது. அத்துடன் பெருமளவு ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

பொதுபாவனை இயந்திரதுப்பாக்கிகள் இலகு இயந்திரதுப்பாக்கிகள் 2 03 கைத்துப்பாக்கிகளுடன் வேறுபல ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. [மா)

வவுனியாவில் ஊர்காவல்படை மீது விடுதலைப் புலிகள் தாக்குதல்

(வவுனியா)

வவுனியாவிலுள்ள மாமடுப் பகுதியில் சிங்கள ஊர்காவற்படையினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதல்களில் ஊர்காவற்படையைச் சேர்ந்த ஒருவர் ஸ்தலத்திலே பலியானார்.

நேற்று முன்தினம் மாலை 7 மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றது. இத்தாக்குதலைத்தொடர்ந்து ஏனைய ஊர்காவல்படையினர் அந்த இடத்திலிருந்துஒடிவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (மா)

டில்லி ஸ்ரீநகரில் நிலநடுக்கம்

[புதுடில்லி]

நேற்றுப் பிற்பகல் டில்லி, ஸ்ரீநகர், சண்டிக்கார் அதன் சுற்று வட்டாரங்களிலும் மற்றும் ஜலந்தாரிலும் லேசாக நிலநடுக்கம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலநடுக்கத்தினால் ஏற்பட்ட உயிரிழப்பு, உடைமை இழப்பைப் பற்றிய தகவல்கள் இதுவரையும் கிடைக்கவில்லையென்று கூறப்படுகிறது.

பாகிஸ்தானின் பல பகுதிகளிலும், காபூல் மற்றும் அதன் சுற்றுப்புறங்களிலும் நேற்று நிலநடுக்கம் ஏற்பட்டதாக அறிவிக்கப்பட்டது. [மா)

கட்டைக்காடு

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவ்ரோ விமானம், ஒரு வை-12 ரக விமானம் ஆகியன வானிலிருந்து கடும் தாக்குதலை மேற்கொள்ள 15க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மூலம் இராணுவத்தினர் தரை இறங்க முயற்சித்தனர்.

தரைஇறங்கிய இராணுவத்தினரைச் சுற்றிவளைத்து விடுதலைப்புலிகள் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் சுற்றிவளைப்பில் தரையிறங்கிய அனைத்து இராணுவத்தினரும் சிக்கியுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆனையிறவு இராணுவ முகாமுக்குள் புலிகளின் முற்றுகையில் சிக்கியுள்ள இராணுவத்தினருக்கு உதவுவதற்காக இவர்கள் தரையிறக்கப்பட்டிருக்கலாமென நம்பப்படுறது. [க)

குண்டு வெடிப்பு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவர்கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் காணப்படுவதாக தகவல் கிடைத்துள்ளதாகவும் அவரைத் தேடி பாதுகாப்பு படையினர் வலைவிரித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ரவிக்குமார் கைது செய்யப்பட்டதும் இரு குண்டுவெடிப்புச் சம்பவங்கள் சம்பந்தமான புலன் விசாரணைகளும் பூர்த்தியடைந்துவிடும் எனவும் பாதுகாப்ப வட்டாரங்கள் தெரிவித்தன. (க)

நேற்று

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

துள்ளது.

இதேவேளை வெடிமருந்துகள் நிரப்பட்ட புல்டோசர்கள் மூலம் விடுதலைப் புலிகள் முகாமைத் தாக்கிவருவதாகவும் அரசு அறிவித்தது.

விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் 30 படையினர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாகவும் இவர்களை முகாமிலிருந்து அப்புறப்படுத்தமுடியாத நிலையில் முகாமுக்குள்ளேயே சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதில் ஆறு பேர் உயிரிழந்துள்ளனர். முகாமுக்குள் உணவுப்பொருள்கள் பற்றாக்குறை ஏற்படும் நிலை ஏற்படவுள்ளதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

சந்திப்பு

(யாழ்பாணம்)

இன்று திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு கச்சேரியில் கூட்டுறவு ஆணையாளார், தலைவர், பொதுமுகாமையாளர் ஆகியோர் யாழ். அரச அதிபரை சந்திக்கும்படி கேட்கப்படுகின்றனர்.

முல்லை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

என்பவரும் மரணமானார்.

நேற்றுமுன்தினம் பட்டிக்குடியிருப்பில் உழவுஇயந்திரத்தில் சென்று கொண்டிருந்த பொழுதே மேற்படி சம்பவம் இடம்பெற்றது.

இதேவேளையில் மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள றுபேஸ் குளத்தில் விடுதலைப் புலிகளுக்கும் சிறிலங்கா விசேட அதிரடிப்படையினருக்கும் கடந்த 10-ம் திகதி இடம்பெற்ற மோதலின போது விடுதலைப்புலிகள் தரப்பில் அம்பாறையைச் சேர்ந்த றூபன் வீரமரணமடைந்தார்.

வீரமரணமடைந்த இரு போராளிகளுக்கும் விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தை தெரிவிக்கின்றனர். [க-மா]

ஷெல் தாக்குதலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மூளாய் பகுதியை நோக்கி பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டனர்.

பொன்னாலையில் விழுந்து வெடித்த ஷெல்லினால் காரைநகர் மேற்கு றோட் முதலாம் கட்டையடியைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் பாக்கியம் (60 வயது) என்பவர் பலியானார்.

இவர் காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து வநதவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவத்தின்போது நான்கு ஆண்களும் ஒரு பெண்ணுமாக மொத்தம் ஐந்து பேர் பலத்த காயமடைந்து ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனா. (139-72)

வடமராட்சி

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றைய தினம் மருதங்கேணியிலிருந்து கட்டைக்காடு வரை சரமாரியான கடல் பீரங்கி விமானத்தாக்குதல்கள் இடம் பெற்றன.

வெற்றிலைக்கேணிப் பகுதியில் நேற்றும். நேற்றுமுன்தினமும் அவ்ரோ விமானங்கள் குண்டுகள் வீசியதில் ஒரு கூட்டுறவுச் சங்கக்கிளை உட்பட பத்துக் கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன. திருமதி ம. மனோரஞ்சினி என்ற இளம் பெண் காயமடைந்தார். நேற்றைய தினம் அதிகாலை மூன்று மணியளவில் ஒரே நேரத்தில் கடற் பகுதியிலிருந்து விசைப்படகுகளால் பீரங்கி வேட்டுக்கள் தீர்க்சப்பட்டன.

வடமராட்சி கிழக்குப் பகுதியில் இரவு ாநரங்களில் ஹெலிகொப்டர்கள் கிரனைட் வீச்சுக்களையும் மேற்கொண்டுவருகின்றன. [61)

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூலை 15ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under Licence Number B/180385/81